## விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

1. விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் (இணையதளத்தில் உள்ள மாதிரி படிவம்) பூர்த்தி செய்யப்பட்டு, பதிவுத் தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். வேறு விதத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒரு பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. விண்ணப்பத்தாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பினால் விண்ணப்பங்கள் தனித்தனி தபால் உறையில் அனுப்ப வேண்டும்.

3. ஒரு தபால் உறையில் ஒரு விண்ணப்பதாரரால் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒரே தபால் உறையில் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பக் கூடாது. அவ்வாறு அனுப்பினால் விண்ணப்பதாரரின் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

4. விண்ணப்பத்திலுள்ள அனைத்து பத்திகளும் (Column) பூர்த்தி செய்யப்பட வேண்டும். எந்த பத்திகளும் (Column) வெற்றிடமாகவிடாமல் "**இல்லை**" என தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

5. விண்ணப்பங்களை அனுப்பும் தபால் உறையின் இடதுபுற மேல்பகுதியிலும், விண்ணப்பத்தில் உரிய இடத்திலும், விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை மற்றும் இன சுழற்சியையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

6. கடவுச்சீட்டு அளவு (Passport Size) வண்ணப் புகைப்படம் விண்ணப்பத்தில் வலதுபுற மூலையில் ஒட்டப்பட்டு புகைப்படத்தின் மேல் பகுதியில் சுய சான்றொப்பத்துடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் புகைப்படத்தின் மீது பின் அடிக்கக்கூடாது.

7. அனைத்து தகவல் பரிமாற்றங்களும், எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணலுக்கான அழைப்பு **(ecourts.gov.in/tn/ariyalur)** என்ற இணையதள வலைதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். வேறு எந்த வகையான முறையிலும் விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் தெரிவிக்கப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் தொடர்ந்து மேற்கூறிய அரியலூர் மாவட்ட நீதிமன்ற இணையதள வலை பக்கத்தை தொடர்ந்து கவனித்து தகவல்களை அறிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

8. முன்னுரிமை கோரும் நேர்வுகளில் முன்னுரிமைக்கான உரிய சான்றிதழ்களின் சான்றொப்பமிட்ட நகல் இணைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

9. தமிழ்வழிக் கல்விக்கு என ஒதுக்கப்படும் இனசுழற்சி முறைக்கு, தமிழ்வழிக்கல்வி (PSTM) பயின்ற தகவல்கள் விண்ணப்பத்தில் உரிய இடத்தில் பூர்த்தி செய்து இருக்க வேண்டும் மற்றும் உரிய சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்.

10. அனைத்து சான்றாவணங்களின் நகல்கள் மட்டுமே உரிய முறையில் விண்ணப்பதாரரின் சுய சான்றொப்பம் செய்து விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் அனுப்பக் கூடாது.

11. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

12. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **05.05.2017** மாலை **5.45** மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்குமாறு பதிவுப் தபாலில் மட்டுமே அனுப்ப வேண்டும். 05.05.2017 – க்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் எக்காரணங்களை கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

13. அரியலூர் மாவட்டத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

14. நிரப்பப்படவுள்ள பதவிகள் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் முற்றிலும் திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் மட்டுமே நிரப்பப்படவுள்ளது. ஏதேனும் வகையில் சிபாரிசு செய்வதாகவோ அல்லது தேர்வு குழுவினரை தொந்தரவு செய்வதாகவோ அல்லது அலுவலக ஊழியர்களை தொடர்பு கொண்டாலோ அல்லது வேறு முறையில் இந்த ஆள்சேர்ப்பு பணியில் தலையீடு செய்வதாகவோ தகவல் கிடைத்தால், அந்த விண்ணப்பதாரரின் விண்ணப்பம் எடுத்த எடுப்பிலேயே முன்னறிவிப்பின்றி தள்ளுபடி செய்யப்படும்.

/(ஒம்) ஏ.கே.ஏ.ரஹ்மான்/
முதன்மை மாவட்ட நீதிபதி,
அரியலூர்.

## INSTRUCTIONS TO THE CANDIDATES

1. All applications should be submitted in the prescribed format as published in **ecourts.gov.in/tn/ariyalur** website, only by Registered post and if more than one application is received for the same post, it leads to the cancellation of the candidature. If any other format of application other than the prescribed format is used then the application will be rejected on the sole ground.
2. The applicant, if wants to apply for more than one post, shall send separate application for each post.
3. The application sent in a postal cover, sent by an applicant should contain only one application. More than one applications sent in a single postal envelope leads to the rejection of the candidature.
4. All the column prescribed in the format should be filled up properly and no column should be left vacant and instead it should filled up as "**NIL**", as and where required.
5. The name of the post, for which the application is submitted and the roster should be entered scrupulously in the appropriate place in the application and also on the top left corner of the envelope containing the application.
6. The Passport size color Photograph of the candidates affixed on the top right corner of the application, should be self attested. The photograph should not be stapled and the photograph should be affixed in the appropriate place.
7. All further communications/Memo/Intimation for interview should be made only through website **ecourts.gov.in/tn/ariyalur**. No communication will be sent to the applicants individually, other than the communication made in the Ariyalur District Court website, and so the applicants are advised to observe further communication in the webpage.
8. On claiming priority, the self attested copy of certificate with regard to the priority should be enclosed with the application. Failure to adhere the same will lead to the rejection of the application.
9. On claiming preference in Tamil Medium of education (PSTM), the copy of such certificate showing the individual having studied in Tamil Medium, should be enclosed with the application.
10. Only photocopies of the certificates should be submitted along with the application and all the copies of the certificates should be duly self attested by the candidates. Original certificates need not be sent along with the applications.
11. Incomplete applications will be summarily rejected. If any of the claims of the applicant is found to be false, the candidature of the applicant will be cancelled without any notice.
12. Duly filed up applications should reach this court on or before **05.05.2017 at 5.45 p.m.** The applications received after the last date and cut-off time will not be entertained under any circumstances.
13. Preference will be given to the candidates who are residing within Ariyalur District.
14. Selection of the candidates will be made through written tests and personal interview purely on the basis of merit and ability. Canvassing in any form or any kind of recommendation with regard to seeking appointment, or causing disturbance to the committee members or the supporting staff in any form, will render the candidate not eligible and it leads to the forfeiture of the candidature without any notice.

**/Sd./-A.K.A.Rahmaan/**
**Principal District Judge,**
**Ariyalur.**